# THASSIM BEEVI ABDUL KADER COLLEGE FOR WOMEN

A Minority Institution Sponsored by Seethakathi Trust, Chennai.
Recognized by DBT under Star College Scheme, Ministry of Science and Technology, Govt. of India.
An Autonomous Institution Affiliated to Alagappa University, Karaikudi.
Accredited by NAAC with "A" Grade [CGPA:3.16] & ISO 9001:2015 Certified Institution.
Recognized by UGC under 2(f) & 12 (B).
Kilakarai – 623517, Ramanathapuram District


## CIRCULAR

Date: 09.05.2026

Dear Students

All students are hereby informed that the examinations scheduled on **11.05.2026 (Forenoon Session)** have been postponed to **13.05.2026 (Forenoon Session)** due to the Government Order issued by the District Administration. Further, the Arrear Examinations (**Afternoon Session**) have been rescheduled to **16.05.2026 (Forenoon Session)**. Students are instructed to attend the examinations on the rescheduled dates without fail.

**PRINCIPAL**

Principal
Thassim Beevi Abdul Kader
College For Women
Kilakarai - 623 517


Phone No. : 04567-241933 / 241934, Mobile : 94426 17038, 94426 17021
E-Mail : principal@thassim.ac.in Website : www.thassim.ac.in

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் .இ.ஆ.ப.,

ந.க.இ213626/2026

நாள் : 04.2026

பொருள்: உள்ளூர் விடுமுறை - இராமநாதபுரம் மாவட்டம் - கீழக்கரை வட்டம் மற்றும் உள்வட்டம் ஏர்வாடி குரூப் மற்றும் கிராமம் ஏர்வாடி தர்ஹாவில் அமைந்துள்ள அல்குத்துபுல் அக்தாப் சுல்தான் செய்யது இபுராஹீம் ஷாஹித் ஒலியுல்லா தர்ஹாவில் சந்தனக்கூடு திருவிழா நடைபெற உள்ளதால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 11.05.2026 அன்று உள்ளூர் விடுமுறை அளித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. பொது (பல்வகை)த் துறை கடித எண். 8585/பல்வகை /2013 -7, நாள்:21.02.2014.
2. இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரின் கடிதம் எண். ந.க.அ4/2780/2026, நாள்:08.04.2026.
3. கீழக்கரை வட்டாட்சியரின் கடிதம் எண். ந.க. அ4/805/2025, நாள்:07.04.2026.

((()))

உத்தரவு:

பொது (பல்வகை)த் துறை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை எண்.154,(பல்வகை)த் துறை, நாள்:03.09.2009 -ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வட்டம் ஏர்வாடி கிராமத்தில், ஏர்வாடி தர்ஹாவில் அமைந்துள்ள அல்குத்துபுல் அக்தாப் சுல்தான் செய்யது இபுராஹீம் ஷாஹித் ஒலியுல்லா தர்ஹாவில் சந்தனக்கூடு திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு எதிர்வரும் 11.05.2026 திங்கள்கிழமை அன்று உள்ளூர் விடுமுறை அளித்தும் அதற்குப் பதிலாக 23.05.2026 அன்று சனிக்கிழமையினை பணி நாளாக அறிவித்தும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

2) இந்த உள்ளூர் விடுமுறை செலாவணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் வராது என்பதால் 11.05.2026 திங்கள்கிழமை அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சார்நிலைக் கருவூலகங்கள் அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறைந்தபட்ச பணியாளர்களோடு செயல்பட வேண்டும்.

3) இவ்வுத்திரவினைச் செயல்படுத்தும்படி மாவட்டத்திலுள்ள அனைத்து துறை அலுவலர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
இராமநாதபுரம்.

17.04.26

பெறுநர்
1. மாவட்ட கருவூல அலுவலர்,
இராமநாதபுரம்.
2. அனைத்து சார்நிலை கருவூல அலுவலர்கள்,
3. மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை அலுவலர்கள்,

நகல் : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் (நாளிதழ்களில் மேற்கண்ட பிரசுரம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்)

நகல் : மண்டல கருவூலம் மற்றும் கணக்குத்துறை அலுவலர், மதுரை.
(தகவலுக்காக அனுப்பப்படுகிறது).

Scanned with OKEN Scanne

பத்திரிக்கைச் செய்தி

பொது (பல்வகை) துறை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை எண்.154 பொது(பல்வகை)த் துறை நாள்:03.09.2020-ன்படி, இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வட்டம் ஏர்வாடி கிராமத்தில், ஏர்வாடி தர்ஹாவில் அமைந்துள்ள அல்குத்துபுல் அக்தாப் சுல்தான் செய்யது இபுராஹீம் ஷாஹித் ஒலியுல்லா தர்ஹாவில் சந்தனக்கூடு திருவிழா 10.05.2026 பிற்பகல் தொடங்கி 11.05.2026 பிற்பகல் வரை நடைபெறுவதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு எதிர்வரும் 11.05.2026 திங்கள்கிழமை அன்று ஒருநாள் மட்டும் "உள்ளூர் விடுமுறை" அளித்தும், அதனை ஈடு செய்யும் பொருட்டு 23.05.2026 அன்று சனிக்கிழமை வேலைநாளாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த உள்ளூர் விடுமுறை நாள் செலவாணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், 11.05.2026 திங்கள்கிழமை அன்று இராமநாதபுரம் மாட்டத்தில் உள்ள அனைத்து சார்நிலை கருவூலகங்கள் அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு குறைந்தபட்ச பணியாளர்களோடு செயல்படும் என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவிக்கப்படுகிறது.

17/4/26

மாவட்ட ஆட்சியர்
இராமநாதபுரம்.

17-04-26

Scanned with OKEN Scanne